## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். 96 /2021**

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 13 ம் தேதி வெள்ளிக் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. தவமணி Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தங்கமணி | தொழில் | : விவசாயம் |
| கணவர் பெயர் | : ஏழுமலை | சமயம் | : |
| கிராமம் | : அத்தியூர் | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 32 |

தேதி 13.10 .2023

சாட்சியையும் எதிரியும் அனந்தபுரம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. திரு. E. ஜெயசங்கர் H.C - 1931 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( 1 முதல் 4 எதிரிகள் ஆஜர். )**

**முதல் விசாரணை**

**1.** நான் அத்தியூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 ஏழுமலை என் கணவர். ஆஜர் எதிரிகள் அனைவரும் எனக்கு பங்காளி உறவுமுறை. உறவினர்கள். எங்கள் வீட்டின் பக்கத்து வீடு.

2. கடந்த 10.07.2020 தேதியன்று காலை 8.45 மணி அளவில் முனியன் வீடு கட்டி கொண்டியிருந்தார். அவர் கட்டும் வீட்டிற்கு அ ருகே எங்களுக்கு சொந்தமான மனை இருந்தது. எங்கள் இடத்தில் கட்டுகிறீர்கள் இடத்தை அளந்துவிட்டு உங்கள் இடத்தில் கட்டுங்கள் என்று நானும் எ ன் கணவரும் எதிரிகளிடம் சொன்னோம். அப்போது பேசிக்கொண்டியிருந்தபோதே வீட்டில்இருந்த இரும்பு பைப்பை எடுத்து வந்து என் கணவரின் மண்டையில் தசரதன் அடித்துவிட்டார். அப்போது முனியன் என் கணவரின் சட்டையை இழுத்து தாடையில் அடித்துவிட்டார். மஞ்சுளா என் புடவையை இழுத்து கையால் அடித்தார். வெங்கடேசன் மம்மூட்டியை எடுத்து இங்கேயே புதைத்துவிடுவேன் என் கணவரிடம் சொன்னார். பிறகு செஞ்சி அர-சு மருத்துவமனைக்கு வந்தோம். மருத்துவமனைக்கு என் அக்கா மகன் சதிஷ்தான் தகவல் தெரிந்து மருத்துவமனையில் எங்களை சேர்த்தார். அங்கு உள்நோயாளியாக 3 நாட்கள் சிகிச்சையில் இருந்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை:**

**3.** என் வீட்டு மனைக்கு அருகில்தான் என் வீட்டு மனை உள்ளது என்றால் சரிதான். இடம் அளவு வேறுபாடு சம்மந்தமாக ,இடத்தை சர்வேயர் மூலமாக அளந்து பார்த்தோமா என்றால் எதிரிகள்தான் அளந்து பார்த்தார்கள். சிவில் கோர்ட்டில் வழக்கு உள்ளது. நிலத்தை அளந்து பார்த்தபோது எங்கள் மனையில் 3 அடி அளவு எதிரிகள் நிலம் இருப்பதாக நிலத்தை அளந்த சர்வேயர் சொன்னார் என்றால் சொன்னார். ஆனால் அவ்வாறு இல்லை. எங்கள் நிலம்தான் அவர்களிடம் உள்ளது என்று சாட்சி கூறுகிறார்.

4 இருதரப்பு பத்திரத்தையும் பார்த்துதான் சர்வேயர் அளந்து சொன்னார் என்றால் நீதிமன்றத்தில் இருந்து வந்துதான் அளந்து பார்த்தார்கள். சிவில் வழக்கு செஞ்சி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு எண் 56/2020 என்ற வழக்கு நிலுவையில்உள்ளது என்றால் சரிதான். 2 முறை அளந்துபார்த்தும் இடம் நாங்கள் விட வேண்டிய நிலையில் விடவில்லை என்றால் சரியல்ல.

5. எதிரிகள் தனக்கு சொந்தமான நிலத்தில் 3 அடி அளவு சுற்றி இடம் விட்டுதான் வீடுகட்டுகிறார்கள் என்றால் சரியல்ல. நாங்கள்தான் எங்கள் வீட்டில் கடகால் எடுத்து எதிரிகளிடம் சண்டைபோட்டோம் என்றால் இடத்தை அளந்துவிட்டு கட்டிடம் கட்டுங்கள் என்று சொன்னோம். நான் மருத்துவமணைக்கு சென்றேனா என்றால் சென்றேன்.மருத்துவரிடம் என் கணவர் அடையாளம் தெரிந்த 15 நபர்கள் இரும்பு கம்பியால் அடித்ததாக சொல்லியுள்ளார் என்றால் இரும்பு கம்பி அல்ல. இரும்பு பைப்பால்அடித்தார்கள். இரும்பு கம்பி வேறு, இரும்பு பைப் வேறு என்றால் ஆமாம். வீடு கடக்கால்தான் போட்டார்கள் என்றால் சண்டை நடந்தபோது பேஸ் மட்டம் போட்டார்கள். அப்போது வீடாக கட்டி முடிக்கவில்லை என்றால் சரிதான். தற்போது வீடு கட்டிமுடித்துவிட்டதாக சாட்சி கூறுகிறார்.

6. இரும்பு பைப் எடுக்க வந்து அடித்ததாக நான் கூறிய நிலையில் வீடே கட்டிமுடிக்காத நிலையில் நான் பொய் சொல்கிறேன் என்றால் கூரை வீடு இருந்தது. கூரை வீட்டில் இருந்து பைப்பை எடுத்து வந்து அடித்ததாக நான் போலிசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சொன்னேன். முதல் விசாரணையிலும், போலிசார்விசாரணையிலும் அவ்வாறு நான் சொல்லாமல் சொல்லியதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பைப்பின் நீளம், அகலம், அடி தெரியுமா என்றால் 3 அடி நீளம் இருக்கும். போலிசாரிடம் நான் அந்த பைப்பை

கொடுத்தேனா என்றால் இல்லை. போலிசார் வந்தபோத நான் எங்கு இருந்தேன் என்றால் மருத்துவமணையில் இருந்தேன். அடித்த பைப்பை போலிசாரிடம் யார் அடையாளம் காட்டியது என்றால் வீட்டில் இருந்த என் நாத்தனார். நானோ என் கணவரோ அடித்த பைப்பை போலிசாரிடம் அடையாளம் காட்டினோமா என்றால் இல்லை. நாங்கள் மருத்துவமணைக்கு வந்துவிட்டோம். எந்த தாடையில் என் கணவரை முனியன் அடித்தார் என்று எனது சாட்சியத்திலோ, போலிசாரிடமோ சொல்லவில்லை என்றால் சரியல்ல.

7. போாலிசார் விசாரணையில் சொன்னது போல் இல்லாமல் வேறு மாதிரியாக சாட்சியம் கொடுக்கிறேன் என்றால் சரியல்ல. அடிக்க மம்மூட்டி எடுத்து வந்ததாக நான் கூறிய நிலையில் மம்முட்டியை நான் போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. சண்டை நடந்தபோது நானும், என் கணவரும் இருந்தோம். எதிரி தரப்பில் எதிரிகள் குடும்பத்தினர்கள் இருந்தார்கள். பிறகுதான் என் நாத்தனார் , மாமியார், மாமனார் வந்தார். எவ்வளவு நேரம் கழித்து வந்தார் என்றால் அடித்த கால்மணி நேரத்தில் வந்தார். போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவத்திற்கு அடுத்த நாள் மருத்துவமணையில் இருந்து வீட்டிற்கு வந்த பின்னர் வீட்டில் வந்து விசாரித்தார்கள். அதன் பிறகு என்னை போலிசார் விசாரித்தார்களா என்றால் இல்லை. 24.10.2020 ம் தேதி போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. சம்பவதன்று நான் அங்கு இல்லை என்றால்சரியல்ல. என் கணவருக்கு ஏற்பட்ட காயமானது என் கணவர் எதிரிகளை தாக்கி ஓடியபோது கீழே விழும்போது ஏற்பட்ட காயம் என்றால்சரியல்ல. எதிரிகளுக்கு எதிராக நான் பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் எதிரிகளை தாக்கினோம் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதும் முடிகக்கப்பட்டது.

**மறுவிசாரணை**:இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளள்ப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.